மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21 ம் நாள் புதன்கிழமை

இ.மஎண்.04/2024
உள்
அசல் வழக்கு எண்.67/2015
--------

முத்துக்கிருஷ்ணமநாயக்கர் (இறப்பு)
1. எம்.சங்கரசுப்புராஜ்
2. எஸ்.பாலகிருஷ்ணன் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. ஏ.நாராயணன்
2. ஏ.ராமசாமி
3. என்.அய்யப்பன்
4. ஆர்.அய்யப்பன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 14.12..2023 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 09.02.2024–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.கே.பலராம் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.V.ரவீந்திரன் அவர்கள் ஆஜராகியும், 5 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.இலட்சுமிகாந்தன் அவர்கள் ஆஜராகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகியும், மனுதாரர்கள் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151 ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால்,

5ம் எதிர்மனுதாரர்/3 வது நபரை 5ம் பிரதிவாதியாக சேர்த்து பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டி மனு 11.12.2023 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-</u>**

3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி சர்வே எண்.644/4 ஏ-ல் உள்ள 45 செண்ட் நிலத்தை கடந்த 23.07.2021ம் தேதி அவரது சகோதரியும், அழகர்சாமியின் மனைவியுமான விஜயலட்சுமி என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவண எண்.1751/2021 படி தானசெட்டில்மெண்ட் கொடுத்துள்ளார். எனவே, 5ம் எதிர்மனுதாரர்/3 வது நபரை 5ம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டுமென்று தாக்கல் செய்திருந்த இ.ம.எண்.03/2023 அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த மனுவினை 5 ம் எதிர்மனுதாரர்/3 வது நபரை 5ம் பிரதிவாதியாக சேர்த்து பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **<u>1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்:-</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். மனுவில் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளைத் தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே கண்டிப்பா நிரூபிக்க வேண்டியது. மனுவில் கண்ட 5ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கிற்கு அவசிய தரப்பினரும் அல்ல, தேவையான தரப்பினரும் அல்ல. 3ம் எதிர்மனுதாரர் அவருக்கு பாத்தியப்பட்டிருந்த சர்வே எண்.644/4 ஏ-ல் கண்ட சொத்தை 5ம் எதிர்மனுதாரருக்கு தானம் செய்து கொடுத்துள்ளார் என்று மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. அசல் வழக்கில் சர்வே எண்.644/4 ஏ-ல் கண்ட சொத்தானது வழக்குச் சொத்தாக காட்டப்படவில்லை. அசல் வழக்கில் 5ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்குமூலம் இல்லை. வழக்கில் தீர்வு காண்பதற்கு 5ம் எதிர்மனுதாரர் அவசிய தரப்பினர் இல்லை. தேவையான தரப்பினரும் இல்லை. எனவே, 5ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்குரையை சீர்திருத்தம் செய்ய

வேண்டுமென்று பரிகாரம் கேட்டிருப்பது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மனு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு அசல் வழக்கில் விசாரணை நடத்தவிடாமல் வழக்கை இழுத்தடிப்பு செய்து காலம் கடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் வேண்டுமென்றே நீதிமன்ற நடவடிக்கைகளையும், சட்டத்தையும் தவறாக பயன்படுத்தி மனு தாக்கல் செய்துள்ளதால், மேற்படி மனுவை எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7) <u>**தீர்வு**</u>:-

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. சர்வே எண்.644/4 ஏ சொத்தானது தாவா சொத்தாக இல்லை. ஆனால், பிராது தபசில் சொத்துக்கு தெற்குப்புற மாலாக புல எண்.644/4 குறிப்பிட்டுள்ளது. மனுதாரரால் தாக்கல் செய்துள்ள இ.ம.எண்.03/2023 மேற்படி சொத்தில் இருந்து தான் ஆக்கிரமிப்பு ஆரம்பமாகியுள்ளது என்றும், 1ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட புல எண்.644/4 ஏ-ல் வீடு கட்டி வாதிக்குரிய சொத்தையும் சேர்த்து ஆக்கிரமிப்பு செய்ததாக உள்ளது. எனவே, மேற்படி சொத்து தபசில் சொத்திற்கு சம்பந்தப்படாவிட்டாலும் கூட அந்த ஆக்கிரமிப்பு பற்றி நிர்ணயம் செய்வதற்கு 3ம் பிரதிவாதி தானசெட்டில்மெண்ட் பிறப்பித்துக் கொடுத்துள்ள அவரது சகோதரியான 5ம் எதிர்மனுதாரர்/3வது நபர் அவசிய தரப்பினர் ஆவார். மேலும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள

இ.ம.எண்.03/2023 மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. 5ம் எதிர்மனுதாரர்/3ம் நபர் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினரா இல்லையா என்பதை இந்த மனுவில் தீர்மானிக்க முடியாது. வழக்கு விசாரணையின் போது மட்டுமே தீர்மானிக்க முடியும். எனவே, இத்தகைய சூழ்நிலையில் மனுதாரரால் 5ம் எதிர்மனுதாரர்/3வது நபரை 5ம் பிரதிவாதியாக சேர்த்து பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டி 11.12.2023 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மேலும், ஒரு வழக்கில் ஏதேனும் சீர்திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படும்பட்சத்தில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவினை அனுமதிக்க வேண்டியது அவசியமாகும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, 5ம் எதிர்மனுதாரர்/3வது நபரை 5ம் பிரதிவாதியாக சேர்த்து பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டி 11.12.2023 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 21ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை**

**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்  தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை**

P ANURADHA Digitally signed by P ANURADHA

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சாத்தூர்.**